FWC

# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015

# Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

- ❖ ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.
- ❖ ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்

01) "தொடர்பாடல் செயன்முறையில் ஐம்புலங்கள் மிக அடிப்படையாகின்றன."

(i) ஷெனொன் அன் வீவர் தொடர்பாடல் மாதிரியில் காணப்படும் கூறுகளைப் பெயரிடுக.

(ii) தொடர்பாடலின் பணிகள் ஐந்தினைக் குறிப்பிட்டு அவற்றிற்கான எடுத்துக்காட்டுக்களைத் தருக.

(iii) தொடர்பாடல் வடிவங்களைக் குறிப்பிட்டு அவற்றினைச் சுருக்கமாக விபரிக்க

(iv) நவீன ஊடகங்களுக்கும் வெகுசன ஊடகங்களுக்கும் இடையில் செயற்பாட்டு அடிப்படையில் காணப்படும் வேறுபாடுகளை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

02) "சமூகம் என்பது இயற்கையான ஓர் ஒழுங்கமைப்பாகும்."

(i) அறிவுச் சமூகத்தில் அவதானிக்கப்படக்கூடிய இரு இயல்புகளைக் குறிப்பிடுக.

(ii) இலங்கை அறிவுச் சமூகமாக மாற்றம் பெறுவதற்கு கவனத்தில் கொள்ள வேண்டிய இருதுறைகளைக் குறிப்பிடுக.

(iii) உலகமயமாதலினால் இன்றைய சமூகத்தில் ஏற்படும் தாக்கங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(iv) அபிவிருத்தி தொடர்பாடல் சிந்தனையின் அடிப்பயையில் மாற்று ஊடகங்களின் செயற்பாடுகள் எவ்வகையில் வகிபங்கு ஆற்றுகின்றன என்பதை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

03) "ஒருவரின் உள்ளகத் தொடர்பாடல் தெரியவருவது நடத்தை மூலமாகும்."

(i) உள்ளகத் தொடர்பாடற் செயன்முறையின் மூன்று படிமுறைகளைக் குறிப்பிடுக.

(ii) சுய எண்ணக்கரு என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

(iii) "சீரற்ற தகவல்களின் அடிப்படையில் எடுக்கப்படுவது சிறந்த தீர்மானமாக இருக்க முடியாது." அந்தவகையில் தீர்மானம் எடுப்பதன் படிமுறைகளைத் தருக.

(iv) கேட்டல் தேர்ச்சியை விருத்தி செய்து கொண்ட ஒருவருக்கு சீரான முறையில் தகவல்களை உள்வாங்க முடியும். கேட்டலுக்கான நான்கு கட்டங்களைக் குறிப்பிட்டு அவற்றினை விளக்குக.

04) "மொழி என்பது மனிதன் கருத்தை வெளியிடப் பயன்படுத்திய சக்தி வாய்ந்த உபகரணம்."

(i) மொழியின் வகைகளைப் பெயரிட்டு, அவற்றிற்கு இவ்விரண்டு உதாரணம் தருக.

(ii) தொடர்பாடல் கருமங்கள் மற்றும் வெகுசன ஊடக செயற்பாடுகளின் போதும் மொழி பயன்படுத்தப்படும் நான்கு வடிவங்களை (பேதங்களை) குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

(iii) "பொதுமக்கள் தொடர்பு நிலைகளில் ஊடகக் கரைந்துரையாடலும் பிரதான இடம் பெறுகிறது." ஊடகக் கலந்துரையாடல் (*Press meet*) என்பதை சுருக்கமாக விளக்கி, அதனை நடைமுறைப்படுத்துகின்ற போது கவனத்தில் கொள்ள வேண்டிய இரு இயல்புகளைக் குறிப்பிடுக.

(iv) ஒத்துணர்வு ($Empathy$) ஆரோக்கியமான தொடர்பாடல் அணுகுமுறைக்கு பயன்படும் நான்கு வழிமுறைகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

05) "அபிவிருத்திக்கான தொடர்பாடல் எண்ணக்கருவை முதன்முதலில் அறிமுகம் செய்தது யுனெஸ்கோ நிறுவனம் ஆகும்."

(i) பேராசிரியர் விமல் திசாநாயக்க அபிவிருத்தி தொடர்பான வரைவிலக்கணத்தில் உள்ளடக்குகின்ற நான்கு அபிவிருத்திக் கூறுகளைப் பெயரிடுக.

(ii) அபிவிருத்தி தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கு பயன்படுகின்ற மரபுசார், நவீன தொடர்பு ஊடக வழிமுறைகள் இரண்டை தனித்தனியே குறிப்பிடுக.

(iii) அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு மக்கள் மத்தியில் அண்மித்த வகையில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு சுவரொட்டி பயன்படும் முக்கியத்துவத்தை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிடுக.

(iv) அபிவிருத்தி செயன்முறையை முன்னெடுப்பதற்கு சமுர்த்தி அதிகாரசபை அரச அமைப்பாக செயற்பட்டு வருகின்றது. மேற்படி அமைப்பு சமூக அபிவிருத்தியில் பங்களிக்கும் விதத்தை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

06) முரண்பாட்டு சூழ்நிலை ஒருவரின் சிந்தனை போக்கில் இருந்து சர்வதேச மட்டம் வரை வியாபகம் பெறக்கூடிய தன்மையைக் கொண்டமைந்தது."

(i) தனியார் ஒருவரின் தேவைகள் நிறைவேற்றப்படாமை முரண்பாட்டு சூழ்நிலை உருவாவதற்கு அடிப்படையாக அமைகிறது. மாஸ்லோவின் தேவைக்கூம்பில் உள்ளடக்கப்பட்டுள்ள தேவைப் படிமுறைகள் ஐந்தினையும் ஒழுங்குமுறைப்படி பெயரிடுக.

(ii) சிக்மன்ட் பிராய்ட் ($Sigmund\ freuid$) உளப்பகுப்பின் அடிப்படையில் சுப்பர் ஈகோ ($Super\ Ego$) உளநிலையில் ஒருவரிடம் அவதானிக்கக்கூடிய இரு இயல்பு நிலைகளைக் குறிப்பிடுக.

(iii) ஒருவரிடம் மன அழுத்தம் ($Stress$) ஏற்படுவதற்கு ஏதுவாக அமையக்கூடிய நான்கு காரணிகளைப் பெயரிட்டு; மன அழுத்தத்தை இழிவாக்குவதற்கு கையாளக்கூடிய இரு நுட்பமுறைகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

(iv) அலுவலகச் சூழலில் பல்வேறுபட்ட முரண்பாட்டுச் சூழ்நிலைகள் தோற்றம் பெறுகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் முரண்பாட்டை முகாமை செய்தல் அணுகுமுறை ஊடாக பிரயோகிக்கக்கூடிய வழிமுறைகளை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

07) "கலாசாரம் என்பது இயங்கும் செயலொழுங்கின் பெறுபேறாகும்"

(i) ரோன்சி மலினோஸ்கி கலாசாரம் தொடர்பாக முன்வைத்துள்ள வரைவிலக்கணத்தில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(ii) ஊடகத்திற்கும் கலாசாரத்திற்கும் இடையிலுள்ள தொடர்பைச் சுருக்கமாக அறிமுகஞ் செய்க.

(iii) ஊடகத்தினால் ஏற்படும் தீங்கு பயக்கும் தாக்கங்களை இழிவளவாக்கப் பயன்படுத்தப்படும் இரு பிரதான முறைகளை உதாரணங்கள் தந்து விளக்குக.

(iv) சமூகத் தொடர்பாடல் செயன்முறையை வெற்றியீட்டுவதில் செல்வாக்குச் செலுத்தும் நான்கு திறன்களைக் குறிப்பிட்டு; அவற்றில் இரண்டினை உதாரணங்களுடன் விளக்குக.

The National e-learning Portal for The General Education